# தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்
# மற்றும்
# இந்திய வானிலை மையம் இணைந்து வழங்கும் வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

## வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை-வேலூர் மாவட்டம்

(25.11.2015 முதல் 29.11.2015 வரை)

**கடந்த நான்கு நாட்களில் நிலவிய வானிலை (20.11.2015 முதல் 23.11.2015)**

வேலூர் மாவட்டத்தில் கடந்த நான்கு நாட்களாக வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது. 75.13மி.மீ அளவு மழை பெய்தது. அதிகபட்ச மற்றும் குறைந்த பட்ச வெப்ப நிலை முறையே 26.0-29.0°C மற்றும் 23.0-24.0°C என்ற அளவில் இருந்தது. காற்றின் ஈரப்பதம் 80 முதல் 100 விழுக்காடு நிலவியது. காற்றின் வேகம் மணிக்கு 3 கிலோமீட்டர் அளவில் இருந்தது.

**அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு**

| தேதி | 25.11.2015 | 26.11.2015 | 27.11.2015 | 28.11.2015 | 29.11.2015 |
|---|---|---|---|---|---|
| மேகமூட்டம் | வானம் ஒரளவு தெளிவாக காணப்படும் | வானம் ஒரளவு தெளிவாக காணப்படும் | வானம் தெளிவாக காணப்படும் | வானம் தெளிவாக காணப்படும் | வானம் ஒரளவு தெளிவாக காணப்படும் |
| மழை பொழிவு (மி.மீ) | 0 | 0 | 0 | 0 | 12 |
| காற்றின் வேகம் கி.மீ/ மணிக்கு | 6 | 7 | 7 | 5 | 6 |
| காற்று வரும் திசை | மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு |
| வெப்பநிலை°C | | | | | |
| அதிகபட்ச வெப்பநிலை°C | 27 | 27 | 28 | 28 | 28 |
| குறைந்த பட்ச வெப்பநிலை°C | 17 | 16 | 16 | 17 | 17 |
| ஈரப்பதம் | 66-96 | 52-89 | 39-85 | 44-92 | 50-93 |

**பண்ணையாளர்கள் அடுத்த ஐந்து நாட்கள் மேற்கொள்ள வேண்டிய வேளாண்மை மற்றும் கால்நடை மேலாண்மை முறை பற்றிய ஆலோசனை.**

1. 29.11.2015 அன்று மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.
2. கால்நடைகளுக்கு நனைந்த வைக்கோல் மற்றும் இதர உலர் தீவனங்களை அளிப்பதை தவிர்த்து, உலர்ந்த பூஞ்சை காளான் இல்லாத வைக்கோல் அளிப்பதன் மூலம் அப்ளாடாக்ஸின் நச்சின் தாக்கத்திலிருந்து பாதுகாக்கலாம்.
3. அடர் தீவனம் தயாரிக்க பயன்படும் தானியம் மற்றும் இதர உணவு வகைகள் உலர்ந்தும், பூஞ்சை காளான் இல்லாமலும் இருக்க வேண்டும்.
4. கால்நடைகளின் கொட்டகையில் வேப்பிலை மற்றும் நொச்சு இலை கொண்டு புகை மூட்டுவதன் மூலம் கொசுக்கள் மற்றும் இதர ஒட்டுண்ணிகள் தாக்கத்தினை குறைக்கலாம்.
5. ஆடுகளை மேடான இடத்தில் தங்கவைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். இதன் மூலம் ஈரம் மற்றும் சேற்றினால் ஏற்படும் குளம்பு அழுகல் நோயிலிருந்து பாதுகாக்கலாம்.
6. கால்நடைகளின் கொட்டகையின் அருகில் தண்ணீர் தேங்காதவாறு பார்த்துக்கொள்வதன் மூலம் ஒட்டுண்ணிகளால் பரவும் நோய்களை தடுக்கலாம்.
7. இளம் கன்றுகள் மற்றும் ஆட்டு குட்டிகளை மழை மற்றும் குளிரின் தாக்கத்தியிருந்து பாதுகாக்குமாறு கேட்டுக்கொள்கிறோம் மேலும் கொட்டகையின் தரை பகுதியின் தேவையான அளவு கூளத்தை பரப்பி மற்றும் மின்விளக்கு அமைத்து தேவையான வெப்பத்தை அளிக்கலாம்.
8. அடர்தீவன உற்பத்திக்கு தேவையான மூலப்பொருட்களை மழையில் நனையாமல் பாதுகாப்பதால் அப்லாடாக்ஸின் எனும் நச்சு உற்பத்தியை தடுக்கலாம்.
9. கோழிப் பண்ணைகளில் நனைந்த கூளத்தை அகற்றிவிட்டு புதிய கூளத்தை பரப்ப வேண்டும்.

**வேளாண் மற்றும் தோட்டக்கலை பயிர்களுக்கான சிறப்பு வானிலைக்கேற்ப மேலாண்மை முறைகள்**

**முக்கிய பயிர்கள்:** நெல், கரும்பு மற்றும் வேர்க்கடலை

1. உழவர்கள் நெல் விதையை 0.05 % அளவு கார்பன்டையசின் என்ற மருந்தினை கொண்டு பதபடுத்தி உபயோகிப்பதன் மூலம் நடுவு பயிரின் வேர் தாக்கத்தினை தடுக்கலாம்.
2. நெற்பயிர் மற்றும் பிற பயிர்களில் உள்ள அதிகமான தண்ணீரை வெளியேற்றுமாறு கேட்டுக்கொள்கிறோம்.